FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2023 மே

Vol. 03 - **தொகுதி** 05



எதிர்ப்பு நடைப்பயணத்தில் ஈடுபட்ட சமூக ஆர்வலரான நூர் கைது செய்யப்பட்டமை



பிரியத் நிகேஷல மீது தாக்குதல்



நகைச்சுவை மேடைப்பேச்சாளர்நடாஷ ாகைது

ஊடக சுதந்திரம் குறித்து மே மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துக்கள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 23 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மே 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 03 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 11 சம்பவங்கள், தொழிற்முறையியம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 08 சம்பவம் என மொத்தம் 23 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## மே மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. ஐக்கிய நாடுகள் சபையின் 10 விசேட அறிக்கையாளர்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.
2. அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதை எதிர்த்து ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளமை.
3. பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) எவ்வாறு பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றது என்ற தொனிப்பொருளில் கொழும்பில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.
4. உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு "ஜனநாயக மதிப்புகள் மற்றும் ஜனநாயகத்தின் நான்காவது தூணின் பங்கு" என்ற தலைப்பில் மெய்நிகர் கருத்தாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.
5. ஊடக அடக்குமுறை மற்றும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திர தின நிகழ்வை மேற்கொண்டமை.
6. ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை: முறைப்பாடு செய்த இராணுவ புலனாய்வு அதிகாரிக்கு நோட்டீஸ்.

7. ICCPR சட்டத்தின் கீழ் காவல்துறைக்கு தகவல் கொடுத்த நபரைச் சந்தேக நபராக ஆக்குவது குறித்து நீதித்துறை தனது திகைப்பை வெளிப்படுத்துகின்றது.

8. காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதலின் நினைவுத் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்ட சிவில் ஆர்வலர்கள் குழுவைப் பொலிஸார் விரட்டியடித்தமை.

9. காலிமுகத்திடல் தாக்குதலுக்கு நீதி கோரி தனி நபர் எதிர்ப்பு நடைப்பயணத்தில் ஈடுபட்ட சமூக ஆர்வலர் கைது செய்யப்பட்டமை.

10. சமூக ஊடக செயற்பாட்டாளர் தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராக நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு நீடிப்பு.

11. சமூக ஊடக ஆர்வலர் பிரியத் நிகேஷலவை அரசியல்வாதி உள்ளிட்ட குழுவினர் தாக்கியமை.

12. அரசாங்கத்தால் வரையப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் காரணமாக பத்திரிகை சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்கள்மீது ஏற்படும் தாக்கம் குறித்து ஹேஷ்டேக் தலைமுறை கருத்தாடல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தமை.

13. விசா ரத்து செய்யப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக இளம் பிரித்தானிய பிரஜை தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டமை.

14. வடமாகாணத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்காக காணி சுவீகரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டமை.

15. தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கை அறிக்கை கொழும்பில் வெளியிடப்பட்டமை.

16. பிராந்திய வானொலி சேவைகளை மூடுவதற்கு இலங்கை வானொலி கூட்டுத்தாபனம் தீர்மானம்.

17. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்குத் தன்னார்வ ஓய்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை.

18. ஸ்டாண்ட் அப் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய நிகழ்ச்சியொன்றின்போது மத நிந்தனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமை.

19. நடாஷா எதிரிசூரியவின் வீடியோவை வெளியிட்டதற்காக யூடியூப் சேனல் தலைவர் கைது செய்யப்பட்டமை.

20. வைத்தியர் சமல் சஞ்சீவவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை.

21. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் இரு வழக்குகளிலிருந்து சந்தேகநபராகப் பெயரிடப்படுவதைத் தடுப்பதற்காக அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவின் தீர்ப்பிற்கான திகதி நிர்ணயம்.

22. நகைச்சுவை மேடை பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவுக்கு எதிராக ICCPR சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கலைஞர்கள் குழு ஒன்று செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தமை.

23. அருண பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவிற்கு அழைக்குமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 மே மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 03 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 11 |
| தொழிற்முறையியம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 08 |
| **மொத்தம்** | **23** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 03 சம்பவங்கள் மே மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2 : 2023 மே மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 03**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 01 |
| இடையூறு விளைவித்தல் | 01 |
| உளவியல் ரீதியான பாதிப்புக்கள் | 01 |
| **மொத்தம்** | **03** |

01. **காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதலின் நினைவுத் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்ட சிவில் ஆர்வலர்கள் குழுவைப் பொலிஸார் விரட்டியடித்தமை.**

காலிமுகத்திடலுக்கு அருகாமையில் குறித்த குழுவினர் போராட்டம் ஒன்றை நடத்தவிருந்தபோது, அங்குப் போராட்டத்தை நடத்த முடியாது என வர்த்தமானி அறிவித்தல் மற்றும் நீதிமன்ற உத்தரவு காணப்படுவதாகத் தெரிவித்த பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றினர். அவர்கள் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மீண்டும் திரண்டபோது, அங்கிருந்தும் துரத்தப்பட்டனர். பின்னர், கொழும்பு பொது நூலகத்திற்கு அருகில் ஊடகங்களுக்குத் தமது அனுபவங்களைத் தெரிவித்தனர்.

ஆதாரம்: youtube.com

02. **சமூக ஊடக ஆர்வலர் பிரியத் நிகேஷலவை அரசியல்வாதி உள்ளிட்ட குழுவினர் தாக்கியமை.**

சமூக ஊடக செயற்பாட்டாளர் பிரியத் நிகேஷல தனது காரில் மே 10 ஆம் திகதி பயணித்துக்கொண்டிருந்தபோது, கடுவெல நகர சபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்ன தலைமையிலான குழுவினர் பத்தரமுல்லை கொஸ்வத்த பகுதியில் காரை நிறுத்திக் கண்ணாடிகளை உடைத்து தாக்குதல் நடத்தினர். காயமடைந்த சமூக ஊடக செயற்பாட்டாளர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தாக்குதல் நடத்திய நபரின் முறைப்பாட்டின் பேரில் பொலிசார் அவரைக் கைது செய்துள்ளனர். வைத்தியசாலைக்கு வந்து அவரைப் பரிசோதித்த மாளிகாகந்த பதில் நீதவான், தலா 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் பிணை வழங்க உத்தரவிட்டார். குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் மேயரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: youtube.com, ravanalankanews.lk

03. **அருண பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவிற்கு அழைக்குமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தமை.**

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை அருண பத்திரிகை மற்றும் அதன் இணையத்தளத்தில் பிரசுரித்ததன் காரணமாக தனது பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அமைச்சர் குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார். கடந்த மே மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி வெளியிட்ட அறிக்கையை ஊடகவியலாளர் நிலாந்த மதுரவல அருண பத்திரிகையிலும் அதன் இணையத்தளத்திலும் அறிக்கையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: truenews.lk, youtube.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**பத்திரிகை சுதந்திரம் தொடர்பான சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகளின் கீழ் பதினொரு சம்பவங்கள் மே மாதத்தில் அவதானிக்கப்பட்டன. இங்கு, காவல்துறையானது பத்திரிகை சுதந்திரம் என்பவற்றின் மீது பல இடையூறுகளை விளைவிப்பதையும் தாண்டிப் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் நோக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளின்பால் தனது கவனத்தை நகர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 03 – 2023 மே : சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 11 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 11 |
| **மொத்தம்** | **11** |

**01. அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதை எதிர்த்து ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளமை.**

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்ததற்காகத் தன்னை கறுப்புப்பட்டியலில் சேர்க்கும் முடிவை மாற்ற விமானப்படை தளபதிக்கு உத்தரவிடக்கோரி ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் சஞ்சீவ துய்யகொண்டா உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை மே 2 அன்று தாக்கல் செய்துள்ளார்.

விமானப்படைத் தளபதி, அதன் மூத்த நிர்வாக அதிகாரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: bbc.com

**02. ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை: முறைப்பாடு செய்த இராணுவ புலனாய்வு அதிகாரிக்கு நோட்டீஸ்.**

ஏப்ரல் 2019 இல், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஊர்வலத்தை அறிக்கையிட்டுக்கொண்டிருந்த பத்திரிகையாளர்களை அச்சுறுத்தியதுடன் அவர்களைப் படம்பிடித்த சந்தேக நபர் ஒருவரை விசாரணை மேற்கொண்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டதே இவ்வழக்காகும். குறித்த நபர் கடற்படை புலனாய்வு அதிகாரியெனப் பின்னர் தெரியவந்துள்ளதுடன், தவசீலனுக்கு எதிராக அவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மே 4ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரரான கடற்படை அதிகாரி பிரசன்னமாகாததால், அடுத்த விசாரணை தினமான செப்டம்பர் 21ஆம் திகதி அவரை நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு முல்லைத்தீவு நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: theleader.lk/news

**03. ICCPR சட்டத்தின் கீழ் காவல்துறைக்கு தகவல் கொடுத்த நபரைச் சந்தேக நபராக ஆக்குவது குறித்து நீதித்துறை தனது திகைப்பை வெளிப்படுத்துகின்றது.**

அக்குறணையில் முஸ்லிம் மத ஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாமெனப் பொலிஸாருக்கு அறிவித்த இசதீன் மொஹமட் சாஜித் என்ற 21 வயது இளைஞன் கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார், மேலும் மே 4 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கொழும்பு பிரதான நீதவான் ICCPR சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவித்ததுடன் அவர் மீது சுமத்தப்பட்ட ஏனைய குற்றச்சாட்டுகளுக்குப் பிணை வழங்கினார். அவர் 16 நாட்கள் காவலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: thetime.lk, mawbima.lk

**04. காலிமுகத்திடல் தாக்குதலுக்கு நீதி கோரி தனி நபர் எதிர்ப்பு நடைப்பயணத்தில் ஈடுபட்ட சமூக ஆர்வலர் கைது செய்யப்பட்டமை.**

காலி முகத்திடல் போராட்டக்காரரான மௌரீன் நூர், தெமட்டகொடையிலிருந்து புறக்கோட்டைக்கு தனியாக எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடைப்பயணம் மேற்கொண்டபோது மாளிகாவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடந்த 10ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: youtube.com, youtube.com

**05. சமூக ஊடக செயற்பாட்டாளர் தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராக நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு நீடிப்பு.**

"எக்ஸ் பிரஸ் பேர்ல்" நட்டஈடு வழக்கு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரை யூடியூப் சேனலில் அவமதிக்கும் வகையில் பொய்யான கருத்துக்கள் வெளியிடப்படுவதை தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளது. இந்தத் தடை உத்தரவு மே மாதம் 10 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனக் கொழும்பு மாவட்ட நீதவான் பூர்ணிமா பரணகம உத்தரவிட்டதுடன், பின்னர் ஜூன் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: theleader.lk

**06. விசா ரத்து செய்யப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக இளம் பிரித்தானிய பிரஜை தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டமை.**

இலங்கையில் தங்கியிருந்து காலி முகத்திடல் போராட்டத்திற்கு ஆதரவளித்த கிலே ஃபீசரின் வீசாவை ரத்து செய்த குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரின் தீர்மானத்திற்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு மேலும் ரூ500,000.00 நீதிமன்ற கட்டணமாகச் செலுத்தவும் உத்தரவிட்டது.

ஆதாரம்: theleader.lk

**07. வடமாகாணத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்காக காணி சுவீகரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டமை.**

காங்கேசன்துறை வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்காக இராணுவத்தினரால் காணி சுவீகரிக்கப்பட்டதாகக் கூறி கடந்த மே மாதம் 23ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 9 தமிழ் இன மக்களைப் பலாலி பொலிஸார் கைது செய்தனர்.

ஆதாரம்: tamilguardian.com

**08. ஸ்டாண்ட் அப் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய நிகழ்ச்சியொன்றின்போது மத நிந்தனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமை.**

கொழும்பில் இடம்பெற்ற நகைச்சுவை மேடை பேச்சு நிகழ்ச்சியொன்றில் அவர் தெரிவித்த கருத்து தொடர்பில்

பௌத்த பிக்குகள் மற்றும் மேலும் பலர் செய்த முறைப்பாடுகள் காரணமாகக் கடந்த மே மாதம் 28ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) பிரிவு 3 மற்றும் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 91(a) ஆகியவற்றின் கீழ் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆதாரம்: thetime.lk

09. **நடாஷா எதிரிசூரியவின் வீடியோவை வெளியிட்டதற்காக யூடியூப் சேனல் தலைவர் கைது செய்யப்பட்டமை.**

நடாஷா எதிரிசூரியவின் நகைச்சுவை மேடைப் பேச்சை யூடியூப் சேனலில் வெளியிட்டதற்காகச் சமூக ஊடக ஆர்வலர் புருனோ திவாகரவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மே 31ஆம் திகதி கைது செய்தனர். எதிரிசூரியவின் உள்ளடக்கத்தில் மத அவமதிப்பு காணப்படுவதாகக் குற்றம்சாற்றப்படுகின்றது. திவாகர ஜூன் 1 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு ஜூன் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: lankadeepa.lk, liveat8.lk

10. **வைத்தியர் சமல் சஞ்சீவவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை.**

சூரியவெவ பிரதேசத்தில் உள்ள குழந்தைகளின் போசாக்கின்மை தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்து காரணமாக, சுகாதார அமைச்சின் பணி இடைநிறுத்தத்திற்கு எதிராக வைத்தியர் சமல் சஞ்சீவ இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார். நிறுவன தலைவர்களின் அனுமதியின்றி ஊடகங்களுக்குத் தகவல்களை வெளியிட அரச அதிகாரிகளுக்குச் சட்டப்பூர்வ தகுதி இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே மற்றும் பிரித்தி பத்மன் சூரசேன ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் உச்ச நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

ஆதாரம்: ft.lk, supremecourt.lk

11. **சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் இரு வழக்குகளிலிருந்து சந்தேகநபராகப் பெயரிடப்படுவதைத் தடுப்பதற்காக அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவின் தீர்ப்பிற்கான திகதி நிர்ணயம்.**

காலி முகத்திடல் செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபராகத் தம்மை அடையாளப்படுத்துமாறு சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெறுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் கோரிக்கை விடுத்துள்ளதுடன். மேலும், ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட பணம் தொடர்பான வழக்கில் சந்தேகநபராக நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் எனக் கொழும்பு கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை ரத்து செய்யுமாறும் அவர் கோரியுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முடிவில், இது தொடர்பான தீர்மானம் ஜூன் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என மே 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

ஆதாரம்: adaderana.lk

## தொழிற்முறையியம்

**'தொழிற்முறையியம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும். சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய-தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழிற்முறையியம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தக் குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் மே மாதத்தில் பதிவாகியுள்ளது.**

**அட்டவணை 04-2023 மே: தொழிற்முறையியம் - 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல் | 01 |
| **மொத்தம்** | **01** |

01. **தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கை அறிக்கை கொழும்பில் வெளியிடப்பட்டமை.**

இலங்கை கணினி அவசரகால தயார்நிலைக் குழுவினால் தொகுக்கப்பட்ட இந்தக் கொள்கைப் பிரகடனம் மே 23ஆம் திகதி பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தகவல் தொழிநுட்பத் துறையில் நிபுணர்கள் மற்றும் வல்லுநர்கள் பலர் கலந்துகொண்டனர். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், இணைய பாதுகாப்பு சட்டமூலம் இந்த வருடம் நிறைவேற்றப்படும் எனத் தெரிவித்தார்.

ஆதாரம்: theleader.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் ஆறு சம்பவங்கள் மற்றும் பொது சேவை ஒளிபரப்பு வடிவங்களின் இருப்பு என்ற குறிகாட்டியின் கீழ் இரு சம்பவங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைக் கடுமையாகச் சவால் செய்யும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராகப் பல தரப்பினர்களின் செயற்பாடுகளும் இதில் அடங்கும்.**

**அட்டவணை 05 – 2023 மே கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 08 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 06 |
| பொது சேவை ஒளிபரப்பு வடிவங்களின் இருப்பு | 02 |
| **மொத்தம்** | **08** |

01. **ஐக்கிய நாடுகள் சபையின் 10 விசேட அறிக்கையாளர்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.**

இக்கடிதம், முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மனித உரிமைகள் மற்றும் குடிமக்களின் அடிப்படைச் சுதந்திரங்களில் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சுட்டிக்காட்டுகிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு இணங்க வேண்டும் என்பதையும் அது வலியுறுத்துகிறது. இங்குக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய 5 முக்கிய விடயங்களை இந்தக் கடிதம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆதாரம்: newsfirst.lk

02. **பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) எவ்வாறு பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றது என்ற தொனிப்பொருளில் கொழும்பில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.**

சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து மே 3ஆம் திகதி உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் சட்டத்தரணி நுவன் போபகே, ஊடகவியலாளர் சரோஜ் பத்திரன மற்றும் மியன்மார் மனித உரிமை ஆர்வலர் சு மோங் ஆங் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். குறித்த நிகழ்வில் மியன்மார் மற்றும் இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் பற்றிய கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ஆதாரம்: MFRM Desk, sinhala.ejournalist.lk

03. **உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு "ஜனநாயக மதிப்புகள் மற்றும் ஜனநாயகத்தின் நான்காவது தூணின் பங்கு" என்ற தலைப்பில் மெய்நிகர் கருத்தாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.**

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாடு மே 6ஆம் திகதி நடைபெற்றது. சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம, அணித்தா பத்திரிகையின் ஆசிரியர் கே டபிள்யூ ஜனரஞ்சன மற்றும் ஆய்வாளர் ராய் கலி பல்தசார் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டதுடன், சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் லசந்த டி சில்வா நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

ஆதாரம்: MFRM Desk

04. **ஊடக அடக்குமுறை மற்றும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திர தின நிகழ்வை மேற்கொண்டமை.**

மே 3 ஆம் திகதி யாழ்.ஊடகக் அமையத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் ஊடக அடக்குமுறை, ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களில் நீதியின்மை மற்றும் உத்தேச பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிராகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

ஆதாரம்: theleader.lk

05. **அரசாங்கத்தால் வரையப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் காரணமாக பத்திரிகை சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்கள்மீது ஏற்படும் தாக்கம் குறித்து ஹேஷ்டேக் தலைமுறை கருத்தாடல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தமை.**

மே 10 புதன்கிழமை நடைபெற்ற இந்த உரையாடலில் விருந்தினராகச் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், சட்டத்தரணி ஸ்வஸ்திகா அருலிங்கம், மனித உரிமை செயற்பாட்டாளர் சிரின் சரூர், சமூக ஊடக செயற்பாட்டாளர் பெனிஸ்லாஸ் துஷான் ஆகியோர் கலந்துகொண்டதுடன் ஹேஸ்டெக் தலைமுறையின் பாரா பிர்தவுஸ் நெறிப்படுத்தினார். குறித்த கலந்துரையாடல் தமிழில் நடைபெற்றது.

**06. பிராந்திய வானொலி சேவைகளை மூடுவதற்கு இலங்கை வானொலி கூட்டுத்தாபனம் தீர்மானம்.**

மே 31ஆம் திகதிக்கு பின்னர் பிராந்திய சேவைகளை மூடுவதற்கு வானொலி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. இதன்படி, ருஹுனு, ரஜரட்ட மற்றும் கந்துரட்ட பிராந்திய வானொலி சேவைகள் சிங்கள சுதேசி சேவையுடன் யாழ்ப்பாண பிராந்திய வானொலி சேவை மற்றும் எப்எம் சேவை தமிழ் சுதேசி சேவையுடன் இணைக்கப்படும் என 19-05-2023 தேதியிட்ட சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: divaina.lk

**07. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்குத் தன்னார்வ ஓய்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஊழியர்களின் எண்ணிக்கையை 50 வீதத்தால் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி, இதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட விருப்ப ஓய்வு திட்டத்திற்கு கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த விருப்ப ஓய்வு திட்டத்தின் கீழ் 300 ஊழியர்கள் விலக விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஆதாரம்: colombotimes.lk, deshaya.lk, facebook.com

**08. நகைச்சுவை மேடை பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவுக்கு எதிராக ICCPR சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கலைஞர்கள் குழு ஒன்று செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தமை.**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களை மீறி நடாஷாவுக்கு எதிராக ICCPR சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் விமர்சித்துள்ளனர். மேலும் இந்த நடவடிக்கையால் கருத்து சுதந்திரம் கேள்விக்குறியாகிவிடும் என வலியுறுத்தப்பட்டது.

ஆதாரம்: facebook.com

---

**அட்டவணை 6: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி– ஏப்ரல் | | 2023 மே |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 18 | - | 03 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 31 | 03 | 11 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழிற்முறையியம் | 02 | - | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 11 | - | 08 |
| **மொத்தம்** | **62** | **03** | **23** |

2023 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: Nalinda Seneviratne